பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
04 03 2025 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- சுயசார்பு இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- தமிழக கடற்கரையை ஒட்டிய மன்னார் வளைகுடாப் பகுதியில் ஆழ்துளை எரிவாயு கிணறு அமைக்கும் நடவடிக்கையை மத்திய அரசு கைவிட வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளர்.
- தமிழகத்தில் ஆறு புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைக்க அனுமதி வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளது.
- மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகாத நிலையில் இந்த விவகாரம் குறித்து தமிழகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுவது தேவையற்றது என பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.
- சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதியில் இந்தியா வெற்றிபெற 265 ரன் என்ற இலக்கை ஆஸ்திரேலியா நிர்ணயித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

சுயசார்பு இந்தியா என்ற இலக்கை எட்டும் நோக்கில் சீர்திருத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

சிறு குறு மற்று நடுத்தர தொழில்கள் தொடர்பான பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணைய வழி கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர், கடந்த பத்து ஆண்டுகளாக உள்ளார்ந்த வளர்ச்சிக்கான திட்டங்களை வெளிப்படைத் தன்மையுடன் அரசு செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை உயர் நிலைக்கு கொண்டு செல்வதில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் கூறினார்.

உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் அணுசக்தி திட்டங்களிலும், முதலீடு மற்றும் வர்த்தக ரீதியிலான சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதிலும் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சிக்கான நிலையான கொள்கையையும், வர்த்தகத்துக்கு உகந்த சூழ்நிலையையும் உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொம்மைகள், காலனிகள், தோல் பொருட்களுக்கு உலக அளவில் அதிக வரவேற்பு இருப்பதாகக் குறிப்பிட்ட பிரதமர், பாரம்பரிய கைத்தொழில்களை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த துறைகளில் இந்தியா முன்னோடியாக திகழ்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் பற்றி குறிப்பிட்ட திரு நரேந்திரமோடி, பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் இத்திட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர்களுக்குத் தேவையான கடனுதவி செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முத்ரா திட்டத்தின் கீழ் கடந்த பத்து ஆண்டுகளில் மகளிர் மற்றும் இளம் தொழில் முனைவோர் பயன்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகளிர் ஷெடியூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் கடனுதவி பெற்று தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறு தொழில்களுக்கான கடன்கள் இருமடங்காக உயர்த்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் திட்டத்தின் கீழ் 14-க்கும் மேற்பட்ட தொழில்கள் பயன்பெற்றுள்ளதாகவும், ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய அளவுக்கு முதலீடுகள் தரப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழக கடற்கரையோரத்தில் மன்னார் வளைகுடா பகுதியில் கடல்சார் ஆழ்துளை எரிவாயு கிணறுகள் அமைக்கும் நடவடிக்கையை மத்திய அரசு கைவிட வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளர்.

இது தொடர்பாக பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மன்னார் வளைகுடா கடற்பகுதியில் பாதுகாக்கப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த திட்டம் அமைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பெட்ரோலியத்துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள ஏலத்திற்கான அறிவிப்பை மறுபரிசீலனை செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மன்னார் வளைகுடா கடல் தேசிய பூங்காவை உள்ளடக்கிய கடற்பகுதியை உயிர்க்கோள காப்பகமாக மத்திய அரசு கடந்த 1989-ஆம் ஆண்டு அறிவித்ததை முதலமைச்சர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இயற்கை எரிவாயுக்கான ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன், அப்பகுதியில் பல்லுயிர் பெருக்கத்திற்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்த பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையில் பிரதமர் தனிப்பட்ட முறையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஆறு மாவட்டங்களில் புதிதாக மருத்துவக் கல்லூரிகள் அமைக்க அனுமதி அளிக்க வேண்டுமென மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜெ பி நட்டாவை சந்தித்து இதற்கான கோரிக்கை மனுவினை அளித்தாக திரு மா சுப்ரமணியன் பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார்.

தமிழக மருத்துவத்துறை தொடர்பான 16 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தர்.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக மத்திய அமைச்சர் உறுதி அளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டு வரும் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் விரைவில் திறக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக-வை வீழ்த்தும் வகையில் அஇஅதிமுக தலைமையிலான கூட்டணி அமையும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தங்களது கூட்டணிக்கு வாக்குகள் சிதறாமல் கிடைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் கண்டிக்கத்தக்கது என்று அவர் தெரிவித்தார்.

படகுகளையும், உடைமைகளையும் பறித்துச் செல்வது போன்ற செயல்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

இந்த பிரச்சினைக்கு அந்நாட்டு அரசுடன் பேசி முறையான தீர்வு ஒன்றை காண வேண்டுமென்று மத்திய அரசை தாம் வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்திற்கு தேவையான நிதியை மத்திய அரசு வழங்குவதற்கு மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு சென்றுள்ள உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டுமென்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் கூட்டணி குறித்து தேர்தல் நேரத்தில் முடிவு செய்யப்படும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணி குறித்து தற்போது பேச வேண்டிய அவசியம் எழவில்லை என்று கூறினார்.

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக மத்திய அரசு இதுவரை அதிகாரப்பூர்வமாக எந்த அறிவிப்பும் வெளியிடாத நிலையில், தற்போது தமிழகத்தில் இந்த விவகாரம் குறித்து ஆலோசிக்க அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்துவது தேவையற்றது என்று அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மத்திய அரசு எந்த மொழியையுயம் திணிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வலுவதாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் பிஜேபி-யை மேலும் வளர்க்க தீவிரமாக பாடுபட்டு வருவதாகவும் திரு அண்ணாமலை தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவராக ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி திரு சுனில்குமார் தகுதியின் அடிப்படையில மட்டுமே நியமிக்கப்பட்டதாக மாநில அரசு இன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

திரு சுனில் குமாரின் நியமனத்தை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிபதி திரு கார்த்திகேயன் விசாரணையை இம்மாதம் 17-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

[]<<<>>>[]

பிரதமரின் திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாணவர்கள் பதிவு செய்து கொள்வதற்கான முகாம் நாளை தூத்துக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தகுதியுள்ள மாணவர்கள் இதற்கான இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( சவுண்ட்பைட் - லஷ்மணன் ) ---40 செகண்ட்*

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் சிறுவாபுரி பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் இன்று சாமிதரிசனம் செய்தார்.

[]<<<>>>[]

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி வெள்ளையாற்றுப் பகுதியில் படகு குழாம் அமைக்கப்பட உள்ள பகுதியை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

அய்யா வைகுண்டரின் 193-வது அவதார தினத்தையொட்டி கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலிலிருந்து தலைமைப்பதி அமைந்துள்ள சாமிதோப்புக்கு அய்யாவழி பக்தர்களின் ஊர்வலம் மற்றும் வாகன பவனி நடைபெற்றது. இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் தேசிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாக வளைகாப்பு நிகழ்ச்சி ஆட்சியர் திரு தினேஷ்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற சிறப்பு முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை ஆட்சியர் திருமதி சிவ சௌந்திரவல்லி வழங்கினார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டத்தில் இம்மாதம் நடைபெறவுள்ள சிறப்பு மண் பரிசோதனை முகாமில் விவசாயிகள் தங்கள் நிலங்களின் மண் மற்றும் நீர் மாதிரிகளை ஆய்வு செய்து பயனடையுமாறு ஆட்சியர் திருமதி உமா கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டம் வளையாப்பட்டி கிராமத்தில் இன்று நடைபெற்ற எருதுவிடும் விழாவில் 200-க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன.

[]<<<>>>[]

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் மார்ச் மாதம் உண்டியில் வருமானமாக நான்கு கோடி ரூபாய் கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதியில் இந்தியா வெற்றிபெற 265 ரன் எடுக்க வேண்டும் என்ற இலக்கை ஆஸ்திரேலியா நிர்ணயித்துள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 49 புள்ளி மூன்று ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 264 ரன் எடுத்தது.

முகமது சமி மூன்று விக்கெட்களை வீழ்த்தினார்.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கோவா அணி – மொகமதன் அணியை எதிர்கொள்கிறது.

கோவாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

*END OF NEWS*